**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.**

எ.ம.சா.3 நாள்: 03.11.2025

வழக்கு எண் **MCOP No. 196/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பன்னீர் செல்வம் | ஊர் | : மதுரை |
| தந்தை பெயர் | : வேலுச்சாமி | தாலுகா | : மதுரை |
| தொழில் | : முதுநிலை உதவியாளர், New india assurance Company | வயது | : 47/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் 3 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் 3 வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கின்றேன்.

1. 22.02.2020 ஆம் தேதியிட்டு எங்கள் நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்ட insurance policy நகல் **எ.ம.சா.ஆ.10**

2. 28.02.2020 ஆம் தேதியிட்டு எங்கள் நிறுவனத்தில் இருந்து 1 ஆம் எதிர்மனுதாரருக்கு காப்பீடு ரத்து செய்வது குறித்து அனுப்பிய அறிவிப்பு அசல் **எ.மா.சா.ஆ. 11**

3. 28.02.2020 ஆம் தேதியிட்டு எங்கள் நிறுவனத்திலிருந்து சேலம் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு காப்பீடு ரத்து செய்வது குறித்துஅனுப்பிய அறிவிப்பு அசல் **எ.ம.சா.ஆ.12**

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.02.2020 ஆம் தேதி எங்கள் அலுவலகத்தில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்தேன். 1 ஆம் எதிர்மனுதாரர் செந்தில் குமார் என்பவர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. TN 90 T5134 என்ற எண் கொண்ட லாரிக்கு காப்பீடு செய்வதற்கு சேலம் மாவட்டம் திப்பம்பட்டி கிளையில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் அவரது வங்கி கணக்கு எண்.6566424092 காசோலை எண்.434656 ரூபாய் 56,128 செலுத்தியதற்கு காப்பீடு 22.02.2020 ஆம் தேதி கொடுக்கப்பட்டது.ஆனால் 27.02.2020 ஆம் தேதி காசோலையை வசூலுக்கு போட்டப்போது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பப்பட்ட விவரம் வங்கி மூலம் தெரியவந்தது. காசோலை திருப்பப்பட்டால் காப்பீடு தானாகவே ரத்தாகி விடும் என பாலிசி நிபந்தனைகளில் சொல்லப்பட்டுள்ளது. காசோலை மோசடி வழக்கு ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இது வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன கார்த்திக் என்பவரின் வாகனம் லாரியின் மீது மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளதில் நான் நேரடியாக பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையின் படி சாட்சியம் அளிக்கிறேன். காசோலை dishonour ஆகிவிட்டதால் பாலிசி ரத்து செய்யப்பட்டு விட்டது என்றும் அவ்வாறு ரத்து செய்யப்பட்டதால் இழப்பீடு வழங்க முடியாது என்றும் நான் சொல்லியுள்ள சங்கதி மனுதாரர் தரப்பில் நிராகரிக்கப்படுகிறது என்று சொன்னால் தவறு. நான் செந்தில்குமாருடன் கூட்டு சேர்ந்து அவர் எங்கள் நிறுவனத்தில் பாலிசி எடுத்துள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை கொடுக்கும் போது வங்கி கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என்பதை பார்த்துவிட்டு தான் காப்பீடு வழங்க வேண்டும் என்றும் அதை விடுத்து ஒரு வாரம்கழித்து காசோலையில் பணம் இல்லை என்பதால் காப்பீடை ரத்து செய்தது சட்டப்படி தவறானது என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு ரத்து செய்த விவரத்தை வட்டார போக்குவரத்து

அலுவலருக்கு அனுப்பிய பிறகு செந்தில்குமாருக்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. இறந்து போன நபருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றும் என்னுடைய சாட்சியத்தில் உண்மை தன்மை இல்லை என்பதால் என்னுடைய நிருபண வாக்குமூலம் நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**<u>4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க கூடாது என்பதற்காக பாலிசி காப்பீடு இல்லை என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனமான நாங்கள் தான் மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/– C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**